பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
11 04 2024 7 15
வியாழக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்-

- உலகத்தரம் வாய்ந்த பொருட்களை கட்டுப்படியான விலையில் உற்பத்தி செய்வதற்கு உலகிலேயே இந்தியா பொருத்தமான இடமாக கருதப்படுவதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி தெரிவீத்துள்ளார்.
- மக்களவைத் தேர்தல் இரண்டு சிந்தாந்தங்களுக்கு இடையேயான போர் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி கூறியுள்ளார்.
- நாடு முழுவதும் கிடங்குகளில் பருப்பு தானிய வகைகளின் இருப்பை வாரந்தோறும் ஆய்வு செய்யுமாறு மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளை மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.
- புனித ரமலான் பண்டிகை இன்று கொண்டாடப்படுவதையொட்டி குடியரசுத் தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் இஸ்லாமிய மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.
- ஐ எஸ் எல் கால்பந்து போட்டி ப்ளே ஆப் சுற்றுக்கு சென்னை அணி முன்னேறியுள்ளது.

---- *இனி விரிவான செய்திகள்* ---

**[]<<<>>>[]**

உலகத்தரம் வாய்ந்த பொருட்களை கட்டுப்படியான விலையில் உற்பத்தி செய்வதற்கு உலகிலேயே இந்தியா பொருத்தமான இடமாக கருதப்படுவதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி தெரிவீத்துள்ளார்.

அமெரிக்காவை சேர்ந்த பத்திரிகை ஒன்றுக்கு பிரதமர் அளித்துள்ள பேட்டியில், தொழிற்சாலைகளை நிறுவி உலகின் பல்வேறு பகுதிகளுக்கு பொருட்களை கொண்டு செல்வதற்கான சிறந்த இடமாக இந்தியா விளங்குவதாகவும் கூறினார்.

தொடர்ந்து உலகில் மிகப்பெரிய பொருளாதார சக்தியாக இந்தியா உருவெடுத்து வருவதை நாட்டு மக்கள் கண்கூடாக பார்த்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உலகில் மூன்றாவது மிகப்பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக இந்தியா மாற வேண்டும் என்ற நாட்டு மக்களின் விருப்பம் விரைவில் நிறைவேறும் என்றும் அவர் தெரிவித்தார்.

விண்வெளி தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, பசுமை எரிசக்தி, செமிகண்டக்டர் உற்பத்தி மற்றும் எதிர்கால தொழில்நுட்பங்களில் இந்தியா முன்னணியில் இருப்பதாகவும் அவர் கூறினார்.

கடந்த பத்து ஆண்டுகளில் மத்திய அரசு மேற்கொண்ட தீவிர முயற்சியின் காரணமாக 25 கோடி மக்கள் வறுமையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தல் இரண்டு சிந்தாந்தங்களுக்கு இடையேயான போர் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், இந்தியாவை எப்போதும் ஒருங்கிணைக்கும் காங்கிரஸ் ஒரு பக்கமும், மக்களை இரண்டாக பிரிக்க முயற்சிப்பவர்கள் மறுபக்கமும் இந்த போரில் நிற்பதாகக் கூறியுள்ளார்.

நாட்டின் ஒற்றுமைக்காகவும், சுதந்திரத்திற்காகவும் யார் போரானார்கள் என்பதற்கும், நாட்டை பிரிக்க நினைத்த சக்திகளுடன் யார் கைக்கோர்ந்திருந்தார்கள் என்பதற்கு சுதந்திரப் போராட்ட வரலாறே சாட்சியாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

சைனிக் பள்ளிகளை தனியார்மயமாக்கும் மத்திய அரசின் முடிவை நிறுத்தி வைக்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் தலைவர் திரு மல்லிகார்ஜூன் கார்கே, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவுக்கு எழுதியுள்ள கடிதத்தில், சைனிக் பள்ளிகளை தனியார்மயமாக்கும் கொள்கை சரியானதல்ல என்று குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புத்துறையின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டு, சுதந்திரமாக சைனிக் பள்ளிகள் செயல்படுவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக அரசு கூறினாலும், அது அப்பள்ளிகளின் உண்மையான நோக்கத்தை சிதைத்துவிடும் என்று திரு மல்லிகார்ஜூன்கார்கே கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் மேலும் ஒன்பது பேர் அடங்கிய வேட்பாளர்கள் பட்டியலை பிஜேபி வெளியிட்டுள்ளது.

தற்போது மாநிலங்களவை உறுப்பினராக உள்ள திரு நீரஜ்சேகர், பாலியா மக்களவைத் தொகுதியில் நிறுத்தப்பட்டுள்ளார்.

திரு நீரஜ் திருப்பதி அலகாபாத் தொகுதியிலிருந்தும் போட்டியிடுகின்றனர்..

இந்நிலையில் காங்கிரஸ் இரண்டு பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலை வெளியிட்டுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலம் ஜல்னா மற்றும் தூலே தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

**[]<<<>>>[]**

காவிரி பிரச்சினையில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட திமுக அரசு தவறிவிட்டதாக தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் குற்றம்சாட்டியுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறில் நேற்று பிரச்சாரத்தில் ஈடுபட்ட அவர், தமிழகத்தில் சொத்துவரி மற்றும் மின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதால் சிறு குறு தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

பிஜேபி கடந்த மக்களவைத் தேர்தலின்போது அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்றும் திருமதி பிரேமலதா குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

நாடு முழுவதும் முதல் முறை வாக்காளர்களை ஊக்குவிக்கும் வகையில் தேர்தல் ஆணையம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழகத்திலும் இதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

திருப்பத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற முதல்முறை வாக்காளர்கள், இந்த தேர்தலில் இளம் வாக்காளர்கள் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டுமென்று தெரிவித்தனர்.

( *சவுண்ட்பைட் - மாணவர்கள் ) –23 செகண்ட்*

**[]<<<>>>[]**

புனித ரமலான் பண்டிகை இன்று கொண்டாடப்படுகிறது,

இந்நாளையொட்டி இஸ்லாமிய மக்கள் மசூதிகளிலும், ஈத்கா மைதானங்களிலும் சிறப்புத் தொழுகையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திரமோடி உள்ளிட்ட தலைவர்கள் பலர் இஸ்லாமிய மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், ஒருமாதம் நோன்பிருந்து அதனை துறக்கும் நாள் ரமலான் திருநாளாக கொண்டாடப்படுகிறது என்றும், இந்நாள் சமூகத்தில் அன்பு மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாகவும் கூறியுள்ளார்.

இந்நாள் ஒற்றுமை, கருணை, கொடை ஆகியவற்றை வலியுறுத்துவதாகவும், ஏழை மக்களுக்கு உதவுவதன் மூலம் தங்கள் மகிழ்ச்சியை மற்றவர்களுடன் இஸ்லாமியர்கள் பகிர்ந்து கொள்வதாகவும் குடியரசுத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசுத் துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் தமது வாழ்த்துச் செய்தியில் ரமலான் பண்டிகை நாட்டின் பன்முக கலாச்சாரத்தை எதிரொலிப்பதாகக் கூறியுள்ளார்.

இந்த பண்டிகை மக்களிடையே கருணை, ஒற்றுமை, பெருந்தன்மையை வளர்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், மக்களிடையே அமைதி, கருணை, ஒற்றுமை ஆகியவற்றை இப்பண்டிகை கொண்டுவரட்டும் என்று கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

நாடு முழுவதும் கிடங்குகளில் பருப்பு தானிய வகைகளின் இருப்பை வாரந்தோறும் ஆய்வு செய்யுமாறு மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளை மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சகத்தின் செயலர் மாநில நுகர்வோர் விவகாரங்கள் மற்றும் உணவுப்பொருள் விநியோகத்துறை முதன்மை செயலர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

நாடு முழுவதும் மிகப்பெரிய துறைமுகங்களில் உள்ள கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ள பருப்பு வகைகளின் அளவை கண்காணிக்க வேண்டுமென்றும், இருப்பு தொடர்பாக தவறான தகவல்களை தெரிவிப்போர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கள்ளச்சந்தையில் பருப்புகளை பதுக்கி அதிக விலைக்கு விற்பனை செய்வதை தடுக்க கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நேதன்யாகு தமது பதவியை காப்பாற்றிக் கொள்வதற்காக காஸா போரை பயன்படுத்திக் கொண்டதாக அமெரிக்க அதிபர் திரு ஜோ பைடன் குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், இஸ்ரேல் நாட்டின் நலனைவிட திரு நேதன்யாகு தமது அரசியல் வாழ்க்கையை தக்க வைத்துக் கொள்வதற்காக இத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்ட காஸா பகுதியில் உணவுப்பொருட்கள் வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள தொண்டு நிறுவன ஊழியர்கள் மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் ஏழு பேர் உயிரிழந்ததற்கும் திரு ஜோ பைடன் கண்டனம் தெரிவித்தார்.,

இதன் பின்னர் இஸ்ரேல் குறித்த அமெரிக்காவின் நிலைப்பாடு மிகப்பெரிய அளவில் மாறி உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் மத்திய காஸா பகுதியில் ஹமாஸ் இயக்கத்தின் தலைவர் இஸ்மாயில் **Haniyeh** குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சிறுவர்கள் உட்பட ஐந்து பேர் உயிரிழந்தனர்.

[]<<<>>>[]

ஐ எஸ் எல் கால்பந்து போட்டி ப்ளே ஆப் சுற்றுக்கு சென்னை அணி முன்னேறியுள்ளது

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப் அணி 4-1 என்ற கோல் கணக்கில் ஈஸ்ட் பெங்கால் அணியை வென்றது.

ஈஸ்ட் பெங்கால் அணி தோல்வியடைந்ததால் புள்ளிப்பட்டியலில் 27 புள்ளிகளுடன் ஆறாவது இடத்தில் உள்ள சென்னை அணி ப்ளே ஆப் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள போட்டியில் சென்னை அணி – கோவா அணியை எதிர்கொள்ளவுள்ளது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பெங்களூரு அணி – மோகன்பெஹான் அணியை எதிாகொள்கிறது.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ராஜஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் குஜராத் அணி மூன்று விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ஜெய்ப்பூரில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த ராஜஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் மூன்று விக்கெட் இழப்புக்கு 196 ரன் எடுத்தது.

197 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய குஜராத் அணி ஏழு விக்கெட் இழப்புக்கு 199 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் மும்பை அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் இப்போட்டி இன்று இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**